உ

முருகன்றுணை

ந்தரனுபூதி

மூலமும்-உரையும்.

ஸ்ரீமத்

திருமயிலை,

வைதிலிங்கதேசிகரால்

பார்வையிடப்பட்டு

காவாந்தண்டலம்,

பாலசுந்திரமுதலியார்

அவர்களால்,

தஞ்சாவூர்,

சின்னகண்ணையசெட்டியார்

அவர்களது.

சகலகலாநிலய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884



உ

கடவுள் துணை.

கந்தரநுபூதி மூலமும் உரையும்.



விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்.

நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முகனுக்கியல்சேர்
செஞ்சொற்புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கரவானை பதம்பணிவாம்.

இதன்பொருள்.

மனமாகிய கனத்தகல்லானது நெகிழ்ந்துஉருக எளிதிலே அருள்செய்யும் அறுமுகக்கடவுளுக்கு இலக்கணம் பொருந்திய செவ்வியசொற்களால் அலங்கரிக்கும் பாமாலை சிறப்படைய ஐங்கரக்கடவுளாகிய யானைமுக விநாயகருடைய பாதங்களைப்பணிவாம் என்றவாறு.

ஆடும்பரிவேலணிசேவலெனப்
பாடும்பணியேபணியாயருள்வாய்

தேடுங்கயமாமுகனைச்செருவிற்
சாடுந்தனியானைசகோதரனே

(இ-ள்) தேடப்பட்ட கயமுகாசுரனை யுத்தகளத்தில்வென்ற ஒப்பற்ற விநாயகருக்குச் சகோதராகிய முருகக்கடவுளே கடைமாடுங் குதிரையாகிய மயிலெனவும், வேலாயுதமெனவும், சேவற்கொடியெனவும் பாடுந்தொழிலே தொழிலாகத் திருவருள்செய்வாய் எ-று. (க)

உல்லாசநிராகுலயோக——
சல்லாபவிநோதனுநீயலையோ
எல்லாமறவென்னையிழந்தநலஞ்
சொல்லாய்முருகாசுராபூபதியே

(இ-ள்) உல்லாசனே, நிராகுலனே, யோகனே, சல்லாபனே, விநோதனே, யாவும நீயலலவா, எல்லாம மறுபடி என்னையிழந்த நன்மையைச்சொல்லாய முருகக்கடவுளே, தேவசேனபதியே எ-று. (உ)

வானோபுனல்பார் கனன்மாருதமோ
ஞானோதயமோகவிநான்மறையோ
யானோமனமோவெனையாண்டவிடந்
தானோபொருளாவதுசண்முகனே.

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு,
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் படவேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே! 16

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே 17

உதியா, மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதி காவல! சூர பயங்கரனே! 18

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா!
அடி அந்தம் இலா அயில்வேல் அரசே
மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே 19

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா!
விரிதாரண! விக்ரம வேள் இமையோர்
புரிதாரக நாக புரந்தரனே 20

கருதா மறவா நெறி காண எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா முருகா மயில் வாகனனே
விரதா சுர சூர விபாடணனே 21

காலைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா!
பாலைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூபதி மேருவையே! 22

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ? முறையோ! முறையோ!
வடி விக்ரம வேல் மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குணபூதரனே! 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல் புரந்தர பூபதியே! 24

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய்! மயில் ஏறிய சேவகனே! 25

ஆதாரம் இல்லை, அருளைப் பெறவே,
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே!
வேதாகம ஞான விநோத மனோ
அதீதா! சுரலோக சிகாமணியே! 26

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே! மயில் ஏறியவானவனே! 27

ஆனா அமுதே! அயில்வேல் அரசே
ஞானா கரனே! நவிலத் தகுமோ?
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே 28

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ,
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே,
மல்லே புரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே! 29

செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாதது என உணர்வித்தது தான்,
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்,
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே? 30

பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே! 31

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படும் ஆறு அதுவாய் விடுமோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே! மலை கூறிடு வாகையனே 32

சிந்த ஆகுல இல்லொடு செல்வம் எனும்
விந்த அடவி, என்று விடப் பெறுவேன்?
மந்தாகினி தந்த வரோதயனே!
கந்தா! முருகா! கருணாகரனே! 33

சிங்கார மடந்தையர் தீநெறி போய்,
மங்காமல், எனக்கு வரம் தருவாய்,
சங்கராம சிகாவல ! சண்முகனே !
கங்காநதி பால ! கிருபாகரனே ! 34

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண, மலர்க் கழல், என்று அருள்வாய் ?
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது, பின்
துதியா விரதா ! சுர பூபதியே ! 35

'நாதா ! குமரா ! நம !', என்று அரனார்
'ஓதாய்', என, ஓதியது எப்பொருள் தான் ?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா ! குறமின் பத சேகரனே ! 36

'கிரிவாய் விடுவிக்ரம, வேல் இறையோன்
பரிவாரம்', எனும் பதமே வலையே
புரிவாய், மனனே ! பொறையாம் அறிவால்,
அரிவாய், அடியோடும், அகந்தையையே. 37

ஆதாளியை, ஒன்று அறியேனை, அறத்
தீதாளியை, ஆண்டது செப்புமதோ ?
கூதாள கிராத குலிக்கு இறைவா !
வேதாள கணம் புகழ் வேலவனே ! 38

மாஎழ் சனனம் கெட மாயை விடா
மூ எடணை என்று முடிந்திடுமோ ?
கோவே ! குறமின் கொடி தோள் புணரும்
தேவே ! சிவசங்கர தேசிகனே ! 39

வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்,
மனையோடு தியங்கி மயங்கிடவோ ?
சுனையோடு அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு, திரிந்தவனே ! 40

சாகாது, எனையே சரணங்களிலே
கா கா, நமனார் கலகம் செயும் நாள்
வா கா, முருகா ! மயில் வாகனனே !
யோகா ! சிவஞான உபதேசிகனே ! 41

குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று,
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே. 42

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா ! முருகா ! நினது அன்பு அருளால்,
ஆசா நிகளம் துகளாயின பின்,
பேசா அநுபூதி பிறந்ததுவே. 43

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ?
வீடும் சுரர் மா முடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழும் கழலே. 44

கரவாகிய கல்வி உளார் கடை சென்று
இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ?
குரவா ! குமரா ! குலிசாயுத குஞ்
சரவா ! சிவயோக தயாபரனே ! 45

எந்தாயு மெனக்கருள் தந்தையுநீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்,
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே! 46

ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே!

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே! 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே! 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா! னசுகா திப!வத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே! 50

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே! 51

கந்தர் அநுபூதி முற்றிற்று.

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய கந்தர் அலங்காரம்

"செந்தேனும் புளித்தறக் கைக்கும்" சில பாடல்கள்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப் ப்ரபஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே. (1)

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே. (2)

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்புஅடைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்க விண்ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே (3)

வையில கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்குளனறும
நொய்யில் பிளவு [illegible] வேனு பகிர்மின்கள் நுஙகட்கு இங்ஙன்
வெய்யிற [illegible] வுதவா [illegible] னை [illegible] நிழல்போ
கைவிட்ட பொருளு முதவாது கா [illegible] கடைவழிக்கே (4)

கோழிக் கொடியன [illegible] பாமல [illegible]
வாழக கருது [illegible] திபில் [illegible]
[illegible] பெருவ [illegible]
ஆழப் புகை [illegible] துவை [illegible] (5)

செபவ [illegible] ருகி [illegible] முருகட
வைவை [illegible] வ [illegible] வன [illegible],
ஐவர்க்கு [illegible]
ஞ்சைசக [illegible] கு [illegible] சரகருளே (6)

நீல [illegible] சகிலம
[illegible] து [illegible] சொன [illegible]
(ஆங்கு) பெள்ளத [illegible] தெரிக [illegible] சகளே
லத்தை வெனறுருப்பா [illegible] காமிகளே. (7)

நா[illegible]ன் செ[illegible] [illegible] [illegible]டிவந்த
[illegible] [illegible] [illegible]
த[illegible] [illegible] [illegible]
தோளும் [illegible] [illegible]. (8)

உதித்தாங்கு [illegible]ல்வதுஞ் [illegible]
விதித்த ஆண்டுஅருள்தருங் கால[illegible]
பதித்தாம்புவாங்கி நின்று [illegible]
[illegible]திச்சான் திருமருக [illegible] (9)

தோலால் சுவர்வைத்து [illegible]
[illegible]லா லெழுபபி வளை[illegible]
பால்ஆர்ச்கையிட்டுத் தனை[illegible]
வேலால் கிரிதொளைத்தோன் இருகா[illegible]. (10)

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்[illegible]
தித்தித்திருக்கும் அமுதுகண்டேன் செயல் [illegible]
புத்திக் கமலத்து உருகிப் பெருகிப் புவன[illegible]
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே. (11)

ஆங்காரமும் அடங்கார், ஒடுங்கார், பரமானந்தத்தே
தேங்கார், நினைப்பும் மறப்பும் அறார் தினைப்போது அளவும்
ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே, முருகன் உருவங்கண்டு
தூங்கார், தொழும்புசெய்யார் என்செய்வார்? யமதூதருக்கே (12)

சிந்திக்கிலேன், நின்று சேவிக்கிலேன், தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன், ஒன்றும் வாழ்த்துகிலேன், மயில் வாகனனைச்
சந்திக்கிலேன், பொய்யை நிந்திக்கிலேன், உண்மை சாதிக்கிலேன்,
புந்திக்கிலேசமுங் காயக்கிலேசமும் போக்குதற்கே. (13)

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள், மெய்ம்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாவெனு நாமங்கள், முன்புசெய்த
பழிக்குத்துணை யவன் பன்னிரு தோளும், பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே (14)

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தர் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே. (15)

(இ-ள்) அறுமுகக்கடவுளே, மெய்ப்பொருளாவது ஆகாயமோ, பூமியோ, அக்கினியோ, வாயுவோ, ஞானேதயமோ, சொல்லப்பட்ட நான்குவேதமோ, நானோ, என்மனமோ என்னையாண்ட விடங்காணேன். (௩)

வளைப்பட்டகைமாதொடுமக்களெனுந
தளைபட்டழியத்தகுமோதகுமோ
கிளைபட்டெழுசூருரமுங்கிரியுந்
துளைபட்டுருவத்தொடுவேலவனே.

(இ-ள்) சுற்றத்தாருடன் பொருந்தி யெழுந்துவந்த தாருகாசூரனுடமார்பும, கிரவுஞ்சமலையும், துளைப்பட்டு ஊடுருவ வேலாயுதத்தைவிட்ட சிவசுப்பிரமணியக்கடவுளே, வளையலணிந்த கைகளையுடைய மனைவி மக்களென்னும் பந்தத்திலகப்பட்டு எளியேனழியத் தகுமோ எ-று. (௪)

மகமாயைகளைந்திடவல்லபிரான்
முகமாறுமொழிந்துமொழிந்திலனே
யகமாடைமடந்தையரென்றயரும்
சகமாயையுணின்றுதயங்குவதே.

(இ-ள்) மண், பொன், பெண், என்று மூவகையில் வருந்தும் உலகமாயையிலேநின்று மயக்குவதையொ

ழித்து பசுத்தாகிய மாசையாய வேரறுத்திடவல்லகட
வுளாகிய (முருகன்) சுப்பிரமணியருடைய ஆறுமு
கங்களை [illegible] நினை எ-று. (௫)

திணியான மனோசிலை மீதுனதா
ளணியாரரவிந்தமரும்புமதோ
பணியாவெனவள்ளிபதம்பணியுந்
தணியாவதிமோகதயாபரனே.

(இ-ள்) குறத்திவைரமொழிக்கிசைந்து கட்டளையிடுவாரி [illegible]
[illegible] தாமரைகளைக் கனைந்தருளிய தணிவிசாசனத்தின் மே
ருப்புறவா [illegible] தயாபரனே. [illegible] எமது
மனமென்னுங் கல்லின்மேல் உம்முடைய திருவடிகளா
கிய அழகிய தாமரைகள் மலருமோ எ-று. (௬)

கெடுவாய்மனனே கதிகேள்கரவா
திடுவாய்வடிவே லிறைதாணினைவாய்
சுடுவாய்நெடுவேதனைதூள்படவே
விடுவாய்விடுவாய்வினையாவையுமே.

(இ-ள்) மனமே நீ கெட்டுப்போவாய் நற்கதியொ
ன்று சொல்வேன கேட்பாயாக பொருளை வெளியாது
கொடுப்பாயாக வடிவேலேந்திய கடவுளுடைய தாள

களை நினைப்பாயாக நெடியவேதனை தூள்படும்படி சுடுவாயாக தீவினையாவையும் விட்டுவிடுவாயாக எ-று.

அமரும்பதிகேளகமாமெனுமிப்
பிமரங்கெடமெய்ப்பொருள்பேசியவா
குமராகிரிராசகுமாரிமகன்
சமரம்பொருதானவநாசகனே.

(இ-ள்) அகமென்னும் அஞ்ஞானங்கெட மெய்ஞ் ஞானப்பொருளைப் போதித்தவனே, குமரனே, பர்வ தராஜபுத்திரிகுமரனே, யுத்தஞ்செய்யும் அசுரர்குல நாசனே, யானமரும்பதி உன்னுள் வினவி யருள்வா யாக எ-று. (௮)

மட்டூர்குழன்மங்கையர்மையல்வலைப்
பட்டூசலடும்பரிசென்றொழிவேன
தட்டூடறவேல்சயிலத்தெறியு
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே.

(இ-ள்) கிரவுஞ்சமலையைத் தட்டுருவும்படி வே லைவிட்டெறியும் நிஷ்டூரனே, நிராகுலனே, பயமற்றவ னே, வாசனைபொருந்திய கூந்தலையுடைய மாதர்கள் மயக்க வலையிற்பட்டு ஊசலாடுந் தன்மையை எப்பொ ழுதொழிவேன் எ-று. (௯)

கார்மாமிசைக்காலன்வரிற்கலபத்
தோமாமிசைவந்தெதிரப்படுவாய்
தார்மார்பவலாரிதலாரியெனும்
சூர்மாமடியத்தொடுவேலவனே.

(இ-ள்) கடப்பமாலையுடைய மார்பனே, தேவேந்திர னுலகிற்குப் பகையாகிய சூரபதுமன் மாமரமாகி மடி யவேலைவிட்ட கடவுளே, கறுத்த எருமைக்கடாவின் மேல் எமன்வந்தால் தோகைமயிலாகிய தேர்மேல்வந் து தரிசனை தருவாயாக எ-று. (௰)

கூசாவெனவென்கிளைகூடியழப்
போகாவகைமெய்ப்பொருள்பேசியவா
நாகாசலவேலவநாலுகவித்
தியாகாசுரலோகசிகாமணியே.

(இ-ள்) கூசாவென்றசத்தத்துடன் என்சுற்றத்தார் கூடி அழாதவண்ணமாய் எனக்கு மெய்ஞானப்பொரு ளைப் போதித்தவனே, மலைகளையுடையவனே, வேலா யுதனே, நாற்கவிக்குந் தியாகங்கொடுப்பவனே, தெய் வலோகசிகாமணியே, என்னைக்காப்பாயாக எ-று. ()

செம்மான்மகளைத்திருடன்திருடன்
பெம்மான்முருகன்பிறவானிறவான்

சும்மாவிருசொல்லறவென்றலுமே
யம்மாபொருளொன்று மறிந்திலனே.

(இ-ள்) செவ்விய மான்களாகிய வள்ளிநாயகியைத் திருடப்பட்ட திருடனை பெருமையையுடையவனை முருகனை பிறப்பிறவன்; மௌனமாக சும்மாவிருவென்றமளவில் யாதொருபொருளையு மறிந்திலன, இஃதாச்சரியமன்று. (௧௨)

முருகன்றனிவேன்முனிநங்குருவென்
றருள்கொண்டறியாரறியுந்தரமோ
வுருவன்றருவன்றுளதன்றிலதன்
றிருளன்றொளியன்றெனநின்றதுவே.

(இ-ள்) முருகக்கடவுள ஒப்பற்றவேலையுடைய முனிவன் நம்முடைய குருவென்று அவருடைய திருவருளைக்கொண்டு அறியாதவர்கள், அவனை யறிவார்களோ, அக்கடவுள் உருவமல்ல, அருவமல்ல, உள்ளதல்ல, இல்லதல்ல, இருளல்ல, ஒளியல்ல, என்று நின்றது எ-று. (௧௩)

கைவாய்கதிர்வேன்முருகன்கழல்பெற்
றுய்வாய்மனனேயொழிவாயொழிவாய்
மெய்வாய்விழிநாசியொடுஞ்செவியா
மைவாய்வழிசெல்லுமவாவினையே.

(இ-ள்) மனமே ஒழுங்காக கிரணமபொருந்திய வேலையுடைய முருககடவுளின திருவடிகளைப் பெற்று மெய்-வாய கண்-மூக்கு-செவி யென னுமஐம்பொறிபிடமாகிய வைமபுலனகளையும ஒழித்துப் பிழைப பாயாக எ-று (௰௪)

முருகனகுமரனகுகனெனறுமொழிந்
துருகுஞ்செயறதுணர்வெனறருளவாய
பொருபுங்கவரும்புவியும்பரவுங்
குருபுங்கவவெண்குணபஞ்சரனே.

(இ-ள்) தேவர்களும பூமியிலுள்ளோரு வணங்கும் குரு சுவாமியே, எண்குணமுடையவனே, முருகன குமரன, குகன் என்று சொல்லி உள்ளமுருகுஞ் செய்கையைத்தந்து அறிவையென்று திருவருள் செய்வாய். ()

பேராசையெனும்பிணியிற்பிணிபட்
டோராவினையேனுழலத்தகுமோ
வீராமுதுசூர்படவேலெறியுஞ்
சூராசுரலோகதுரந்தரனே.

(இ-ள்) வீரனே பழமையாகிய சூரபதுமனழிவு பட வேலாயுதமெறிந்த சூரனே, தேவலோகதுரந்தர

னே பெரியஆசையெனனும் நோயிற் கட்டுப்பட்டு யா
ளொன்றுமறியாத வினையினேன் உழலத்தகுமோ.

()

யாமோதியகல்வியுமெம்மறிவுந்
தாமேபெறவேலவர்தந்ததனாற்
பூமேன்மயல்போயறமெய்ப்புணர்வீர்
நாமேநடவீர்நடவீரினியே.

(இ-ள்) யாமோதின கல்வியும் எம்முடைய அறிவும் நாம் பெற்றுக்கொள்ள வேலாயுதக்கடவுள் கொடுத்தருளினாலே பூமியின்மேலே மயக்க நீங்கத் தருமத்தை உண்மையாகச் செய்ய வல்லவர்களே இனி முருகக்கடவுளை நாவினாலேபாடி நடவுங்கள் நடவுங்கள் எ-று. (௧௭)

உதியாமரியாவுணராமறவா
விதியாலறியாவிமலன்புதல்வா
வதிகாவனகாவபயாவமரா
வதிகாவலசூரபயங்கரனே.

(இ-ள்) பிறந்து இறந்து அழிந்து மறந்துவாழும் பிரமன் விஷ்ணு அறியப்படாத பரமசிவன் மைந்தனே மேலானவனே, அங்கமில்லாதவனே, பயமில்லாதவனே, அமராபதிக்காவலனே, சூரர்களுக்குப் பயங்கரரூபவனே, வந்தனம்வந்தனம் எ-று. (௧௮)

வடிவுந்தனமும்மனமுங்குணமும்
குடியுங்குலமுங்குடிபோகியவா
வடியந்தமிலாவயில்வேலரசே
மிடியொனறொருபாவிவெளிப்படினே.

(இ-ள்) அடியுமுடியுமில்லாத கூர்மைபொருந்திய வேலாயுதக்கடவுளே, வறுமையென்றொருபாவி வெளிப்பட்டால் வடிவமும் தனமும் மனமும் குணமும் குடியும குலமும தன்னைவிட்டுக் கூடிப்போய்விடும.

அரிதாகியமெய்ப்பொருளுக்கடியே
னுரிதாயுபதேசமுணர்த்தியவா
விரிதாரணவிக்ரமவேளிமையோர்
புரிதாரககாகபுரந்தரனே.

(இ-ள்) அருமையாகிய உண்மைப்பொருளை அடியேனுக்கு உரித்தான ஞானோபதேசம் உணர்த்தியவனே, விரிந்தகாரணமுடையவனே, பராக்கிரமனே, சிவசுப்பிரமணியனே, அமராபதிக்குத் தாரகனே, தேவலோகத்தைக்காப்பவனே, தோத்திரம் தோத்திரம்.

கருதாமறவாநெறிகாணவெனக்
கிருதாள்வனசந்தரவென்றிசைவாய்

வாகாமுருகாமயில்வாகனனே
விரதாசுரசூரவிபாடனனே.

(இ-ள்) வாகனே, முருகனே, மயில்வாகனனே, விர தனே, சூரனே, சூரசம்மாரனே, உம்மைநினைத்து எப் பொழுதும் மறவாத நல்வழியைக்காண எனக்கு தங் களுடைய உபயபாததாமரைகளை என்றருள்செய்வா ய்-எ-று. (௨௧)

காளைக்குமரேசனெனக்கருதித்
தாளைப்பணியத்தவமெய்தியவா
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும்
வேளைச்சுரபூபதிமேருவையே.

(இ-ள்) கூந்தற்பனையின் பாளைக்கொப்பாகிய கூந் தலையுடைய வள்ளிநாயகி திருவடிகளைவணங்கும் சுப் பிரமணியக்கடவுளைத் தேவசேனபதிமேருவைக் கா ளையாகிய குமரேசக்கடவுளை வணங்க வெனக்குச்செய் தவங்கள் பொருந்தினவாம் எ-று. (௨௨)

அடியைக்குறியாதறியாமையினான்
முடியக்கெடவோமுறையோமுறையோ
வடிவிக்ரமவேன்மகிபாகுறமின்
கொடியைப்புணருங்குணபூதரனே.

(இ-ள்) வடித்தவேலையுடைய மகிபனே, குறமாதாகிய வள்ளிநாயகியைப் புணரும் குணக்குன்றமே உம்முடைய திருவடியைக் குறியாது நானறியாமையினாலே முடியைக்கெடுத்தல் முடியாது எ-று. (உங)

கூர்வேல்விழிமங்கையர்கொங்கையிலே
சேர்வேனருள்சேரவுமெண்ணுமதோ
சூர்வேரொடுகுன்றுதொளைத்தநெடும்
போர்வேலபுரந்தரபூபதியே.

(இ-ள்) சூரனையும் கிரவுஞ்ச மலையையும் வேரோடுதுளைக்க நெடிய போர்வேலையுடையவனே, தேவேந்திரலோகாதிபதியே, கூர்மையாகிய வேல் போலுங் கண்களையுடைய பெண்கள் கொங்கையிடத்தச்சேர்பவனாகிய நான உம்முடைய அருள்பெறவெண்ணுவேனோ எ-று. (உச)

மெய்யேயெனவெவ்வினைவாழ்வையுகந்
தையோவடியேனலையத்தகுமோ
கையோவயிலோகழலோமுழுதுஞ்
செய்யோய்மயிலேறியசேவகனே.

(இ-ள்) பன்னிருகையும் வேலாயுதமும் இருதிருவடியும் முற்றும் அழகுபொருந்தியவனே, மயில்வாகன

மெய்யெனவே, வெவ்வினை வாழ்வை உண்மையெ
னமகிழ்ந்து ஐயோ அடியேனுமே நான் அலையத்தகு
மோ எ-று. (உ௫)

ஆதாரமிலேனருளைப்பெறவே
நீதானொருசற்றுநினைந்திலையே
வேதாகமஞானவிநோதமனோ
தீதாசுரலோகசிகாமணியே.

(இ-ள்) வேதாகமனே, ஞானவிநோதனே, மனோதீ
தனே, சுரலோகசிகாமணியே, ஆதாரமில்லாதவனாகிய
நான உமது திருவருளைப்பெற தாங்கள் சற்றுமதனை
நினைத்திலை எ-று. (உசு)

மின்னேநிகராவாழ்வைவிரும்பினையா
னென்னேவிதியினையயனிருந்துமேவா
பொன்னேமணியேபொருளேயருளே
மன்னேமயிலேறியவானவனே.

(இ-ள்) பொன்னே நவமணியே தேடரும்பொரு
ளே திருவருளே நிலைபேறுடையவனே மயிலேறிய
எங்கள் தேவனே, மின்னலைநிகர்த்த வாழ்க்கை இச்சித்த
அடிமைவருந்துதல் என்ன இதுவிதியினயமோ எ-று.

ஆனாவமுதேயயில்வேலரசே
ஞானாகரனேநவிலத்தகுமோ
யானாகியவென்னைவிழுங்கிவெறுந்
தானாய்நிலைநின்றதுதற்பரமே.

(இ-ள்) கெடாத வமிர்தமே, கூர்மைபொருந்திய வேலேந்திய அரசனே, ஞானமுடையவனே, யான்வேறென்றதைத் துதிக்கத்தகுமோ என்னை விழுங்கி வெட்டவெளியாய்த் தானாய் நிலைநின்றது தற்பரம் எ-று.

இல்லேயெனுமாயையிலிட்டனைநீ
பொல்லேனறியாமைபொறுத்திலையே
மல்லேபுரிபன்னிருவாகுவிலென்
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே.

(இ-ள்) மல்லுத்தஞ்செய்கிற பன்னிருதோள்களில் என்புன்சொல்லை நான்சொல்லாகத்தரிக்கும் சுடர் பொருந்திய வேலாயுதத்தை யுடையவனே, இல்லையென்னும்மாயையில் என்னை வைத்தாய் நீ அப்பனாகிய என் அறியாமையை தேவரீர் பொறுத்ததில்லை எ-று.

செவ்வானுருவிற்றிகழ்வேலவனன்
றொவ்வாததெனவுணர்வித்ததுதா
னவ்வாறறிவாரறிகின்றதலா
லெவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே.

(இ-ள்) செவ்வானத்தைப்போலும திருவுருவில் பிரகாசிக்கும வேலாயுதக்கடவுள் அக்காலத்தில பிரமனுக்குச் சிருட்டித்தொழிலை யொவ்வாததென்று தன்பிதாவின்செவியில உபதேசித்த பிரணவப்பொருளது சிவனதா னவ்வாறறிவார் அவர் அறிகின்றதல்லாமல அப்பிரணவத்தை வெவ்வாறு ஒருவருக்குப போதிப்பது எ-று. ()

பாழ்வாழ்வெனுமிப்படுமாயையிலே
வீழ்வாயெனவென்னை விதித்தனையே
தாழ்வானவைசெய்தனதாமுளவோ
வாழ்வாயினிநீமயில்வாகனனே.

(இ-ள்) மயில்வாகனக்கடவுளே பாழாகிய வாழ்வென்னுமிந்தப் படுமாயையிலேவிழக்கடவாயென்று வென்னை விதித்துவிட்டாயே நான் தாழ்வானவைகளைச் செய்தேனோ அக்குற்றங்களுளவோ இனி நீவாழ்வாயாக எ-று. (உக)

கலையேபதறிக்கதறித்தலையூ
டலையேபடுமாறதுவாய்விடவோ

[illegible]
[illegible]

(இ-ள்) [illegible] (௩௭)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) [illegible] (௩௮)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) போகவீரனே, அரசனே, ஆறுமுகனே. [illegible] [illegible] திருபாலகனே, [illegible]

டைய நியவழியிற்போய்ச் சேட்டாதிருக்க வெனக்கு வா ளருளுவாயாக எ-று. (௯௮)

விதிகாணுமுடம்பைவிடாவினையேன்
கதிகாணமலர்க்கழலென்றருள்வாய்
மதிவாணுதல்வள்ளியையல்லதுபின்
துதியாவிரதாசுரபூபதியே.

(இ-ள்) இளம்பிறைபோன்ற நெற்றியையுடையவ ளாகிய வள்ளியை அல்லாமல் வேறொருவரைத் துதியாதவி ரதனே, தேவர்பூபதியே, விதியாலெழுதப்பட்ட உடலைவி டாத வினையினையுடைய யான் கதியடைய மலர்போலும் திருவடியை யெப்பொழுதருள் செய்வாயாக எ-று. ()

நாதாகுமாரநமவென்றரனார்
ஓதாயெனவோதியதெப்பொருடான்
வேதாமுதல்விண்ணவர்சூடுமலர்ப்
பாதாகுறமின்பதசேகரனே.

(இ-ள்) பிரமன் முதல் தேவர்கள் சிரசிற்சூடுமலர் போலு முடியையுடை யவனே. வள்ளிநாயகி பதங்க ளைத் தரிக்கும் முடியையுடையவனே, நாதனே, குமர னே, நமவென்று பரமசிவனார் ஓதாயென்று சொல்ல நீ ஓதிய பிரணவப்பொருள் எப்பொருள் எ-று. ()

கிரிவாய்விடுவிக்ரமவேலிறையோன்
பரிவாரமெனும்பதமேவலையே
புரிவாயமனனேபொறையாமறிவா
லரிவாயடியோடுமகந்தையையே.

(இ-ள்) மனமே, கிரவுஞ்சமலை பிளவுபட வேல்வி ட்ட சிவசுப்பிரமணியக்கடவுள் தேவசேனைகளோடு வாழ்ந்த திருவடிகளைப் பரவிலையே அகோ திருவுடை குக் கொண்டுசெய்வாயாக பொறையாகிய அறி[illegible] ல் அகந்தையை யடியோடும் அறிவாயாக எ-று. ([illegible])

ஆதாளியையொன்றறியேனையறத்
தீதாளியையாண்டதுசெப்புமதோ
கூதாளகிராதகுலிக்கிறைவா
வேதாளகணம்புகழ்வேலவனே.

(இ-ள்) கூதாளச்செடியைச் சிரசிலே தரிக்கும்[illegible] டாகளுடைய மகளாகிய வள்ளிக்கு நாயகனே [illegible] ளக்கூட்டம்புகழும் வேலாயுதக்கடவுளே, அவ்[illegible] தவனை ஒன்றும் அறியாதவனை முற்றுங்குற்றவாளி[illegible] ஆட்கொண்டதைச் சொல்வாயாக எ-று. (௩[illegible])

மாவேழ்சனனங்கெடமாயைவிடா
மூவேடனையென்றுமுடிந்திடுமோ
கோவேகுறமின்கொடிதோள்புணரும
தேவேசிவசங்கரதேசிகனே.

(இ-ள்) அரசனே, குறமகளாகிய வள்ளிநாயகியாரோ ளெப்புணருநநேசனே சிவசங்கரனே தேசிகனே, மகத்தாகிய எழுபிறப்புங்கெட மாயைவிடாத மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னும் மூன்றாசையும் எப்பொழுது முடிவுபெறுமோ எ-று, (௩௯)

வினையோடவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடருவித் துறையோடு பசுந்
தினையோடிதணோடு திரிந்தவனே.

(இ-ள்) சுனையோடுங் கான்யாற்றுத் துறையோடும் பசுமையாகிய தினையோடும் தினைப்புனங்காக்கும் பரணோடும் மனைவியோடு தியங்கி மயங்கித் திரிக்க கடவனோ, என நீ வினையோட விடப்பட்ட கதிர்வேலை மறவேன் எ-று. (௪௰)

சாகாதெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ்செயுநாள்
வாகா முருகா மயில்வாகனனே
யோகா சிவஞானோபதேசிகனே.

(இ-ள்) வெற்றியுடையவனே, முருகனே, மயில்வாகனனே, யோகனே, சிவஞானோபதேசிகனே, இயமன்

கலந்து செய்ய [illegible] நாள்களையில் [illegible] எனினும் உமது உடைய பாதம் [illegible] எ-று. ()

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலும்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

(இ-ள்) [illegible] எ-று. (சஉ)

தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளா
லாசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூதி பிறந்ததுவே.

(இ-ள்) சாலையிற கெடாக மணியையும் வஸ்திரத்தையுந் தரிக்கப்பட்ட குறவள்ளிக்கு நேசனே, முருகனே, உன்றன்னாகிய திருவருளினாலே மாயாபாசங்களறுந்தன, அநுபூதி பிறந்தது எ-று. (சங)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௪௪)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௪௫)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௪௬)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௪௭)

அறிவொன்றுமின்றி [illegible]
[illegible]
செறிவென்று [illegible]
வெறியென்று [illegible] வேலவனே. (௪௮)

தன்னந்தனிநின்றதுதானறிய
இன்னம்மொருவர்க்கிசைவிப்பதுவோ
மின்னுங்கதிர்வேல்விகிர்தாநினைவார்க்
கின்னங்களையுங்க்ருபைசூழ்சுடரே. (௪௯)

மதிகெட்டறவாடிமயங்கியறக்
கதிகெட்டவமேகெடவோகடவே
னதிபுத்திரஞானசுகாதிபவத்
திதிபுத்திரர்வீறடுசேவகனே. (௫௰)

உருவாயருவாயுளதாயிலதாய்
மருவாய்மலராய்மணியாயொளியாய்க்
கருவாயுயிராய்க்கதியாய்விதியாய்க்
குருவாய்வருவாயருள்வாய்குகனே. (௫௧)

கந்தரனுபூதி மூலமும் - உரையும்

முற்றிற்று.

